பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 14 திங்கட்கிழமை 30.08.2021 கதிர் 162

## மேலும் 581 பேர் கைது!

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 581 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 85 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதையடுத்து தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறிய குற்றச்சாட்டில் இது ☞2

# ஈட்டி எறிதல் போட்டியில் உலக சாதனை படைத்த பிரியந்தவுக்கு கோட்டா, மஹிந்த, சஜித் பாராட்டு

2020 டோக்கியோ பாரா ஒலிம்பிக்கில் உலக சாதனையுடன் தங்கப் பதக்கத்தை வென்ற இலங்கை வீரர் தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

ஜப்பான் டோக்கியோ நகரில் தற்போது நடைபெற்று வரும் 16ஆவது பாரா ஒலிம்பிக்கில் இலங்கை சார்பில் போட்டியிட்ட தினேஷ் பிரியந்த ஹேரத், ஈட்டி எறிதல் போட்டியில் உலக சாதனையுடன் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

வரலாற்றில் முதன் முறையாக இலங்கைக்கு இவ்வாறாக தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.

இந்த வெற்றிக்கு ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அந்தவகையில், இலங்கைக்கு தங்கப் பதக்கத்தை வெற்றியீட்டித் தந்த இராணுவ வீரரான தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு, எனது மனமார்ந்த வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கின்றேன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ☞2




# காணாமல்போனோர் அலுவலகம் சுயாதீனமாக இயங்க வேண்டும்!

## இலங்கை அரசிடம் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி கோரிக்கை



இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் சுயாதீனமாக இயங்க வேண்டும் என்று இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர், அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களின் சர்வதேச ☞2



## பந்துலவின் மனைவிக்கும் கொரோனா

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவின் மனைவிக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் தற்போது சிகிச்சைக்காகக் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அமைச்சர் பந்துல குணவர்தனவுக்குக் கடந்த ☞2

# தொற்று, மரணங்களின் எண்ணிக்கையே ஊரடங்கின் தளர்வினைத் தீர்மானிக்கும்

## அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு



கொரோனா வைரஸ் தொற்று என்பது சாதாரண நோயல்ல. அதிக அவதானத்துடன் செயற்பட வேண்டும். நாளாந்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் நாளாந்தம் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டே தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தைத் தொடர்ந்து அமுல்படுத்துவதா? அல்லது தளர்த்துவதா? என்ற தீர்மானம் எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும் பெருந்தோட்டத்துறை அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

பலப்பிடிய வைத்தியசாலைக்கு கண்காணிப்பு விஜயம் ☞2

# அசங்க நவரத்னவுக்கு கொரோனாத் தொற்று

## இதுவரை 25 எம்.பிக்களுக்குத் தொற்று

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்னவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்த நாளிலிருந்து தற்போது வரை ☞2



## ஐ.தே.கவின் முன்னாள் எம்.பி. கொரோனாத் தொற்றால் சாவு



போலந்து நாட்டின் இலங்கைக்கான முதலாவது தூதுவராகப் பணியாற்றிவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டியுடர் குணசேகர (வயது 86) ☞2

## ரிஷாத்தின் மனைவி உள்ளிட்ட மூவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் மனைவி உட்பட மூவரையும் செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் மூவர் சார்பில் ☞2

## குருநகர் வாள்வெட்டு கொலை;

## பிரதான சந்தேகநபர் உட்பட அறுவர் சரண்

யாழ். குருநகரில் வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் பிரதான சந்தேகநபர் உட்பட 6 பேர் இன்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

குருநகர் பகுதியில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஜெரன் (வயது - 24) என்பவர் படுகாயமடைந்தார். அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

சம்பவ தினத்தன்று குறித்த இளைஞர் சக நண்பர்களுடன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த மற்றொரு குழு அவர்கள் மீது சரமாரியாக வாள்வெட்டை மேற்கொண்டுவிட்டுதப்பிச்சென்றது.

சம்பவத்தில் மேலும் ☞2

## சர்வதேச விசாரணை ஊடாகவே நீதி வேண்டும்

### சிவாஜி வலியுறுத்து

சர்வதேச ரீதியான விசாரணைகள் மூலம்தான் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க முடியும் என்றும், அதனைப் பெறுவதற்கு நாங்கள் முனைப்புக் காட்ட வேண்டும் என்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமுமான எம்.கே.சிவாஜிலிங்கம் ☞2

## மேலும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை கைதுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 61 ஆயிரத்து 587 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்க மற்றும் வெளியேறுவதற்கு முயற்சித்த 1,792 பேர் நேற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் 805 வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## காணாமல்போனோர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களுடைய குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் ஆகியவற்றுடன் உலகம் நெடுகிலும் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பு தோழமையுடன் இணைந்து கொள்கின்றது.

ஆளொருவர் வலிந்து காணாமல் ஆக்கப்படும் சம்பவம் குடும்பங்களினதும், சமூகங்களினதும் அன்புக்குரியவர்கள் குறித்த உண்மையைத் தெரிந்து கொள்ளும் உரிமையையும், பொறுப்புக்கூறல், நீதி மற்றும் இழப்பீடு என்பவற்றுக்கான உரிமையையும் இல்லாமல் செய்கின்றது.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் அச்சத்துடனும் பாதுகாப்பற்ற உணர்வுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

காணாமல்போன குடும்ப உறுப்பினர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான போராட்டத்தின் முன்னணியில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெண்களே இருந்து வருகின்றனர்.

அவர்கள் அச்சுறுத்தல், துன்புறுத்தல் மற்றும் பழிவாங்குதல்கள் என்பவற்றை எதிர்கொள்ள முடியும்.

இலங்கையில் 2016ஆம் ஆண்டில் காணாமல்போன ஆள்கள் தொடர்பான அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டமை அரசால் முன்னெடுக்கப்பட்ட முக்கியமான ஒரு வழிமுறையாகும்.

குறித்த அலுவலகத்தின் வெற்றி பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பப்படுவதில் தங்கியிருக்கின்றது - என்றுள்ளது.

## ரிஷாத்தின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவை மூன்றாவது முறையாகவும் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தலவாக்கலை - டயகமவைச் சேர்ந்த சிறுமி, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் கொழும்பு இல்லத்தில் பணிப்பெண்ணாக வேலை செய்தபோது எரிகாயங்களுக்குள்ளாகி பின்னர் மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ரிஷாத் பதியுதீனின் மனைவி, மனைவியின் தந்தை மற்றும் சிறுமியை வேலைக்குச் சேர்த்த இடைத்தரகர் ஆகியோரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## அசங்க......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர்களான அமைச்சர் பந்துல குணவர்தன, ஜனக வக்கும்புர மற்றும் அசங்க நவரத்ன ஆகியோர் மாத்திரமே சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பந்துலவின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை மாலை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஈட்டி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், தாய்நாட்டைக் கொடூரமான பயங்கரவாதத்திலிருந்து காப்பாற்றுவதற்கும் இம்முறை சர்வதேச விளையாட்டு வரலாற்றின் பொன்னெழுத்துக்களில் இலங்கையின் பெயரை எழுதுவதற்கும் நீங்கள் அளிக்கும் அர்ப்பணிப்புக்கு மீண்டும் மீண்டும் ஒட்டுமொத்த இலங்கை மக்களின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தங்கப் பதக்கத்தை வென்று நாட்டுக்குக் கௌரவத்தை ஏற்படுத்திக்கொடுத்த தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு தனது வாழ்த்துகளைக் கூறிக்கொள்கிறேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஏற்கவே 2016ஆம் ஆண்டு பாரா ஒலிம்பிக்கில் நாட்டுக்கு வெண்கலப் பதக்கத்தை வென்று கொடுத்த இவர் இம்முறை தங்கத்தை வென்று உலக சாதனை புரிந்துள்ளமையை வாழ்த்துவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

அத்துடன், தங்கம் வென்று நீங்கள் இலங்கை தாய்நாட்டை பெருமைப்படுத்தியுள்ளீர்கள். உங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வீடியோ மூலம் தினேஷ் பிரியந்த ஹேரத்தைத் தொடர்பு கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

(இன்னொரு செய்தி 7ஆம் பக்கத்தில்)

## தொற்று......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட அவர் அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது:-

கொரோனா வைரஸ் தாக்கத்தை 'பெருந்தொற்று' என உலக சுகாதார ஸ்தாபனம் பிரகடனப்படுத்தியுள்ளது. மருத்துவத்துறையில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளால்கூட வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. ஆகவே, கொரோனாத் தொற்றை சாதாரண நோயென ஒருபோதும் கருத முடியாது. அனைத்துத் தரப்பினரும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

கொரோனா தாக்கத்தைக் கருத்தில் கொண்டு நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. சுகாதாரத் தரப்பினரது ஆலோசனைகளுக்கமையவே ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு அமுலிலுள்ள ஊரடங்குச் சட்டத்தைத் தொடர்ந்து நீடிப்பதா? அல்லது தளர்த்துவதா? என்ற தீர்மானம் எடுக்கப்படும்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதும் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கடுமையாக்கப்படும். மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பொதுப் போக்குவரத்து சேவைகளை மட்டுப்படுத்தப்பட்டளவில் முன்னெடுப்பது அவசியமாகும் - என்றார்.

## ஐ.தே.கவின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா வைரஸ் தொற்றால் மரணமடைந்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

பொதுச் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக அவரது உடல் தகனம் செய்யப்பட்டுள்ளது.

## சர்வதேச......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இன்று ஓகஸ்ட் 30 உலக காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்றைய தினம் உலக கட்டாயமாக காணாமல் செய்யப்பட்டோர்களுக்கான நாள். இலங்கைத் தீவைப் பொறுத்த வரையில் உலகிலே இன்றைக்கு கட்டாயமாக காணாமல் செய்யப்பட்டோர் வரிசையில் இரண்டாம் இடத்தில் இருக்கிறது. இது எங்களுடைய போராட்டங்கள் தீவிரமடைந்த காலத்திலேயே 1970 களில் ஒரு சிலராகவும் 1980 களில் ஒரு சில டசின் கணக்காகவும் காணப்பட்ட விடயங்கள் 1990 களில் இன்னும் தீவிரமடைந்து நூற்றுக்கணக்கிலே சென்ற நிலைமையிலே 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆயிரக்கணக்கில் காணாமல்போகின்ற நிலைமை உருவாக்கப்பட்டு 2009ஆம் ஆண்டு கொடிய போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் இதுவரை தமிழ் தரப்பில் இருந்து கட்டாயமாக காணாமல்செய்யப்பட்டோரின் எண்ணிக்கை சுமார் 20 ஆயிரம் என ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குக் கிடைத்த புகார்களின் அடிப்படையில் தெரிவிக்கின்றனர்.

இந்த எண்ணிக்கை இன்னும் சற்று அதிகமாக இருக்கலாம். போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பல இடங்களிலே கிழக்கு மாகாணம், வடக்கிலே முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் 600 பேருக்கு மேற்பட்டோர் காணாமல்போயிருக்கின்றார்கள்.

1996ஆம் ஆண்டில் காணாமல் போனோர் புதைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று அஞ்சப்படுகின்ற சூழ்நிலையிலேதான் 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததன் பின் சுமார் 6 ஆயிரத்து 500 பேரை இராணுவத்தினரிடம் அவர்களது மனைவிமாரோ, பெற்றோரோ, சகோதரர்களோ கையளித்தவர்களைப் பற்றி கூட இன்னும் எந்தவிதமான தகவல்களும் இல்லை. இந்தச் சூழ்நிலையின் பின்தான் இவர்களைக் கண்டுபிடிக்க எத்தனை குழுக்களை நியமித்து இருந்தாலும் அதிலிருந்து பின்வாங்கினார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலே 30/1 என்ற தீர்மானத்தை 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி நிறைவேற்றுவதற்கு இணை அனுசரணை வழங்கியதாக இலங்கை அரசு சொன்னாலும் அதன் பிறகு அவர்கள் பின் வாங்கினார்கள். இந்தச் சூழ்நிலையில் தான் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தங்களுடைய உறவுகளை தேடி வருடக்கணக்கில் அலைந்து கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு ஏறக்குறைய 2 ஆயிரம் நாள்கள் வீதிகளில் இருந்து போராடி வருகிறார்கள்.

சர்வதேச ரீதியான விசாரணைகள் மூலம்தான் நீதி கிடைக்க முடியும். அதனைப் பெறுவதற்கு நாங்கள் முனைப்புக்காட்ட வேண்டும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க்குற்றவாளிகளை நிறுத்தாத வரை இதற்கான நீதி கிடைக்க வாய்ப்பில்லை. இல்லாவிட்டாலும் கூட அதை நோக்கிப் பயணிக்கின்ற விசாரணைகள் மூலம் இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டு, கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

இழைக்கப்பட்ட இனப் படுகொலை, போர்க்குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்களுக்காக ஈடு செய்தி நீதி (பரிகார நீதி) வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடத்தி தமிழ் மக்களுடைய தலைவிதியை சர்வதேச நாடுகள் ஐ.நாவினுடைய ஏற்பாட்டிலே, ஐ.நாவினுடைய மேற்பார்வையிலேயே செய்யப்பட வேண்டும். காணாமல்போகச் செய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு நீதியும், நிவாரணமும், இழப்பீடுகளும் வழங்கப்பட வேண்டும் என்ற நிலையை நோக்கி இந்தத் தினத்திலே உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற விடயத்துக்கு இன்னும் சில குறுகிய காலத்துக்குள்ளே நீதி கிடைக்க வேண்டும் என்று அனைவரும் சேர்ந்து ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் - என்றுள்ளது.

## பிரதான......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவர் படுகாயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைத் தேடி தீவகம் உட்பட பல இடங்களில் தேடுதல் நடத்தினர்.

9 நாள்களின் பின்னர் பிரதான சந்தேகநபர் உட்பட 6 பேர் இன்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தப்பிக்க உதவிய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட 5 பேர் நீதிமன்றத்தின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் 20 பேர் வரை உடந்தையாக உள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவருக்கும் தாக்குதல் நடத்தியவர்களுக்கும் இடையில் 2018ஆம் ஆண்டு மோதல் இடம்பெற்றது எனவும், அதன் தொடர்ச்சியாக இந்த வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது எனவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பேரிடரில் உதவும் வழி

கொரோனாத் தொற்றுப் பேரிடரைப் பொறுத்தவரை யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு அதை எதிர்கொள்வது தான் புத்திசாலித்தனம். கற்பனைச் சித்தாந்தத்தில் அதற்கு முகம் கொள்ள எத்தனிப்பது பெரும் தோல்வியில்தான் முடியும்.

சரியோ பிழையோ – எது அல்லது யார் காரணமோ என்னவோ – நிலைமை கட்டு மீறி வருகின்றது என்பது உண்மை. சுகாதார – மருத்துவ அதிகாரிகள் பலர் கூறுகின்றமை போன்று பல இடங்களிலும் கொரோனா வைரஸும் அதன் திரிவும் சமூகத் தொற்றாகிவிட்டன என்பது கண்கூடு. வைத்தியசாலைகள் தொற்றாளர்களால் நிரம்பி வழிகின்றன. மருத்துவ – சுகாதார ஊழியர்களே தொற்றுக்கு இலக்காகி அவலப்படும் நிலைமை. தொற்றாளர்கள் அனைவருக்கும் வைத்தியசாலைகளில் இடமளித்து சிகிச்சை அளிக்கும் கட்டம் தாண்டி விட்டது.

இனி வைத்தியசாலைகளில் கொவிட் தொற்றாளர்களை அனுமதிப்பது என்பது முன்னுரிமை வகுத்து அதன் அடிப்படையில்தான் முன்னெடுக்கப்பட வேண்டிய விவகாரமாக மாறிவிடுகின்றது.

நாட்டில் 70 லட்சம் பேருக்கு இரண்டு தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டு விட்டன. தடுப்பூசி இரண்டும் பெற்றவர்கள் இந்த தொற்றுக்கு முகம் கொடுத்து மீளுவது என்பது ஓரளவு சாத்தியமானது.

ஆக, தொற்றாளர்கள் எண்ணிக்கை தினசரி ஐயாயிரத்தினால் அதிகரித்து வருவதினால் இரண்டு விடயங்கள் தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளன.

ஒன்று – கட்டாயம் வைத்தியசாலைகளில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட வேண்டியவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு மருத்துவ நிலையங்களில் முன்னுரிமை அடிப்படையில் சிகிச்சை அளிக்க இடமளிப்பது. இரண்டு தடுப்பூசிகளும் பெற்ற தகுதி நிலைமை, வயது, பிற நோய்கள், நோயாளியின் உடல் வலிமை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த விடயத்தை மருத்துவ – சுகாதார அதிகாரிகள் தீர்மானித்து வரிசைப்படுத்தலாம்.

அடுத்தது – நிலைமை எல்லை மீறி வருவதால் – எண்ணிக்கை கட்டு மீறி உயர்வதால் – தொற்றாளர்களை வீடுகளில் வைத்து பராமரித்து சிகிச்சை அளிப்பதும் தவிர்க்க முடியாததாகி வருகின்றது. அத்திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட தொடங்கியாகிவிட்டது.

இப்படி வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட தொற்றாளர்களிடமிருந்து கடந்த எட்டு, பத்து நாள்களில் மருத்துவ சிகிச்சை விசாரணைகள் தொடர்பில் சுமார் பத்தாயிரம் தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளன என்று இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

இப்படி வீடுகளிலேயே தங்கி தனிமைப்படுத்தல் மேற்கொண்டு, சுய சிகிச்சை முறைகளுக்கு உட்படும் பொது மக்களின் உடல்நிலையை. சுயமாகக் கண்காணிப்பதற்குத் தேவையான 'பல்ஸ் ஒக்ஸி மீட்டர்' என்ற சிறிய கருவியை அந்த அமைப்பு வழங்கி வருகின்றது. விரலில் தொடுகை மூலம் ஒருவரின் நாடித் துடிப்பு வீதம், இரத்தத்தில் ஒட்சிசனின் அளவு போன்ற அடிப்படை மருத்துவ அவதானிப்புகளை இக்கருவியினால் ஒழுங்காக கண்டறிய முடியும். அவற்றை சுழற்சி முறையில் தேவையான நோயாளிகளுக்குக் காலத்துக்கு காலம் வழங்குவதன் மூலம் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு, சிகிச்சையில் தங்கியிருக்கும் நோயாளிகளை சரியாக கண்காணித்து மருத்துவ ஆலோசனை வழங்கவும், தேவைப்படின் விரைந்து வைத்தியசாலைகளுக்கு மாற்றவும் முடியும் என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டுகின்றது.

இந்த சிறிய கருவியை சுமார் 6 ஆயிரம் முதல் 8 ஆயிரம் ரூபா விலையில் சந்தையில் பெற்றுக் கொள்ளக் கூடியது. இதில் இப்போது 250 கருவிகளை வைத்துக் கொண்டுதான் அந்த அமைப்பு காரியமாற்றி வருகின்றது. இது தேவைக்குப் போதுமான எண்ணிக்கை அல்ல. தாராள மனப்பான்மை கொண்டோர் – இந்தப் பேரிடர் எதிர்கொள்ளும் ஒன்றுபட்ட முயற்சியில் இணைய விரும்புவோர் – கணிசமான எண்ணிக்கையில் இக்கருவிகளை இலங்கை மருத்துவர் சங்கத்திற்கு அன்பளித்து அதன் மூலம் பங்காற்ற முடியும்.

வசதி உள்ளோர் தத்தமது குடும்பத்துக்கு என ஒரு கருவியை வாங்கிப் பேணுவது நல்லது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சுழற்சி முறையில் அல்லது அன்பளிப்பாக இவற்றை வழங்குவதன் மூலம் இடர்கால உதவியை மேற்கொள்ளவும் முடியும். மக்கள் இதனை கவனத்தில் எடுப்பது நல்லது.

## இலங்கை – நேபாளம் இடையில் மீண்டும் நேரடி விமான சேவை

இலங்கை- நேபாளத்துக்கு இடையிலான நேரடி விமான சேவை பல தசாப்த இடைவேளைக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்படி, ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ், நாளை செவ்வாய்க்கிழமை முதல் கொழும்பு- காத்மண்டுவுக்கு இடையிலான நேரடி விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்கும் என நேபாளத்துக்கான இலங்கை தூதுவர் ஹிமாலீ அருணதிலக, தனது டுவிட்டர் பதிவில் உறுதிப்படுத்தியுள்ளார்.

குறித்த விமான சேவையின் ஊடாக சுற்றுலாத்துறை மேம்படுத்தப்படும் என்பதுடன் இரு நாடுகளுக்கிடையில் மக்கள் தொடர்பும் மேம்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுமார் நான்கு தசாப்தங்களுக்கு முன்னர், காத்மண்டு- கொழும்புக்கு இடையிலான வழக்கமான நேரடி விமானங்களை, அப்போதைய ரோயல் நேபால் ஏயர்லைன்ஸ் இயக்கி வந்தது.

ஆனாலும் விமானங்கள் வணிக ரீதியாக சாத்தியமில்லை என்பதால் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நுவரெலியா- கிரகெறி வாவியில் மிதக்கும் விருந்தகம் தனிமை!



நுவரெலியா- கிரகெறி வாவியில் அமைந்துள்ள மிதக்கும் விருந்தகம் மாநகர சபை சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த விருந்தகத்தில் விருந்துபசாரத்தில் ஈடுபட்ட நான்கு பேரையும் இரண்டு ஊழியர்களையும் சுகாதாரப் பிரிவினர் தனிமைப்படுத்தியுள்ளனர்.

நுவரெலியா ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு கடமை நிமித்தமாக வருகை தந்திருந்த நான்கு பேரையும் அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்துமாறு நுவரெலியா மாநகர சபை சுகாதாரப் பிரிவினரால் அவர்கள் வசிக்கின்ற கிராம சேவகர் பிரிவிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. குறித்த நான்கு பேரும் வெளிமாவட்டங்களில் இருந்து நுவரெலியாவிற்கு வருகை தந்துள்ளனர். கெகிராவ பகுதியில் இருந்து 3 பேரும் ஹபரண கொகரல்ல பகுதியில் இருந்து ஒருவருமாக நான்கு பேர் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் கடமை நிமித்தமாக நுவரெலியா ஆடைத் தொழிற்சாலைக்கு வருகை தந்துள்ள நிலையில், பயணக் கட்டுப்பாடுகளையும் கொரோனா விதிகளையும் மீறி, கிரகெறி வாவியில் அமைக்கப்பட்டுள்ள நடமாடும் விருந்தகத்தில் விருந்துபசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த நடமாடும் விருந்துபசாரத்தில் கடமையில் இருந்த இருவரும் அங்கேயே 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஏனைய நால்வரையும் அவர்களுடைய வீடுகளுக்கு செல்வதற்கு சுகாதாரப் பிரிவினர் அனுமதி வழங்கியமையுடன், அவர்களை அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன எனவும் சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

## கடந்த மூன்று தினங்களில் 121 பேருக்கு நுவரெலியா– லிந்துலையில் கொரோனா

நுவரெலியா- லிந்துலை பகுதியில் கடந்த மூன்று தினங்களுக்குள் 121 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக லிந்துலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி ஜகத் அபேகுணரத்ன குறிப்பிட்டுள்ளார்.

லிந்துலை பொதுசுச் காதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட 225 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளிலேயே, 121 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது டயகம, போப்பத்தலாவ, ஹோல்புறூக், மெராயா, இராணிவத்தை உள்ளிட்ட பிரதேசங்களிலேயே தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவ்வாறு அடையாளம் காணப்பட்ட அனைவரும் தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையுடன், அவர்களுடன் தொடர்பைப் பேணியவர்களும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## யாழ்ப்பாணம்- பூம்புகார் வீதியில் பழைய மோட்டார் குண்டு மீட்பு



யாழ்ப்பாணம்- பூம்புகார் வீதியில் பழைய மோட்டார் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை, பூம்புகார் ரயில்வே கடைக்கு அருகிலேயே இந்த பழைய மோட்டார் ஷெல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir — மாலைப்பதிப்பு



# ரொக்கெட்களை மறித்து அழித்தது அமெரிக்கா!



ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள ஹமீத் கர்சாய் சர்வதேச விமான நிலையத்தை நோக்கி வீசப்பட்ட ஐந்து ரொக்கெட் குண்டுகளை, அமெரிக்காவின் ஏவுகணை எதிர்ப்பு சாதனம் முறியடித்தது. இன்று இந்த குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இதில் ஏற்பட்ட உயிர் சேதம் குறித்து எந்தத் தகவலும் இல்லை. இந்த ரொக்கெட்டுக் களை ஏவியது யார் என்பது தெரியவில்லை என்ற போதிலும், ஐ.எஸ்.ஐ.எஸ்–கே மூலம் இது ஏவப்பட்டிருக்கலாம் என்று அமெரிக்க அதிகாரி சந்தேகம் வெளியிட்டுள்ளார். பெயர் தெரியாத நிலையில் பேசிய அமெரிக்க அதிகாரி, காபூல் நேரமான திங்கட்கிழமை அதிகாலையில் ரொக்கெட்டுக்கள் வீசப்பட்டன. இருப்பினும் அனைத்தும் பாதுகாப்பு அமைப்பால் வீழ்த்தப்பட்டனவா என்பது தெளிவாகத் தெரியவில்லை. என கூறினார்.

விமான நிலையத்திற்கு அருகில் வசிக்கும் மக்கள் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு செயற்படும் சத்தம் கேட்டதாகவும், விமான நிலையத்திற்கு அருகில் புகை எழும்புவதை காணமுடிந்ததாகவும் தெரிவித்தனர். நாளையுடன் அமெரிக்க துருப்புக்கள், ஆப்கானிலிருந்து வெளியேற இருக்கும் நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு ஆப்கானிஸ்தான் தலைநகரில் வெடிபொருள் நிரப்பப்பட்ட வாகனம் மீது அமெரிக்க வான்வழித் தாக்குதல் நடத்தியது. கடந்த வாரம் வியாழக்கிழமை, ஐ.எஸ்.ஐ.எஸ். கே. என்ற தீவிரவாத அமைப்பு நடத்திய இரட்டை தற்கொலை குண்டுதாக்குதல்களில் 13 அமெரிக்க சேவை உறுப்பினர்கள் உட்பட 170க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 200 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது காபூல் விமான நிலையம்!

காபூலில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறுகின்றமை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், காபூல் விமான நிலையத்தை தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவரத் தயாராகி வருவதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் கடந்த 20 ஆண்டுகளாக அமெரிக்கப் படை கள் தலிபான்களுக்கு எதிராக போர் நடத்திவந்த நிலையில், தற்போது அங்கிருந்து அமெரிக்க இராணுவம் வெளியேறிவருகிறது. இது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், மேலும் ஆயிரம் பேர் காபூல் விமான நிலையத்தில் மீட்கப்படாமல் உள்ளனர் என மேற்கத்திய நாடுகளின் பாதுகாப்பு அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த நிலையிலேயே, காபூல் விமான நிலையத்தை தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவர தயாராகி வருகிறோம் என தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.



இதுகுறித்து வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ள தலிபான்கள், 'எங்களிடம் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் உள்ளனர். விமான நிலையத்தைதங்களின் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ள அவர்கள் தயாராக உள்ளனர். காபூல் விமான நிலையத்தின் முழுக் கட்டுப்பாட்டை துரிதமாக எடுத்து கொள்ள அமெரிக்கர்களின் ஒப்புதலுக்காக காத்துக்கொண்டிருக்கிறோம்' என தெரி வித்துள்ளனர்.



## ஆளில்லா விமானம் மூலம் அமெரிக்கா தாக்குதல்!

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நேற்று ஆளில்லா விமானம் மூலம் அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. காபூல் விமான நிலையத்தில் வெடிப்புச் சம்பவம் ஒன்றை நிகழ்த்த திட்டமிட்டிருந்த ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் ஆப்கானிஸ்தான் பிரிவான ஐ.எஸ்–கே அமைப்பின் உறுப்பினர்களை இலக்கு வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்கா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நாங்கள் இலக்கு வைத்த நபரை தாக்கி விட்டதாகவே நம்புகிறோம் என்று அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதலில் பொதுமக்கள் யாரும் இறந்தனர் எனவோ, காயமடைந்தனர் எனவோ ஆரம்பகட்ட செய்திகள் எதுவும் தெரிவிக்கவில்லை. இலக்கு வைத்து தாக்கப்பட்ட வாகனத்தில் தாக்குதலின் பின்பு நடந்த வெடிப்பு அந்த வாகனத்தில் கணிசமான அளவு வெடிபொருள்கள் இருந்தமையை குறிக்கின்றது என்றும் அந்த இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தத் தாக்குதலில் சிறுவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டனர் என காபூலில் இருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இந்தத் தாக்குதலால் காபூல் விமான நிலையத்துக்கு இருந்த தவிர்க்க முடியாத அச்சுறுத்தல் ஒழிக்கப்பட்டது என்று அமெரிக்கா இராணுவ அதிகாரியான கப்டன் பில் அர்பன் கூறியுள்ளார்.

## அமெரிக்காவை இருளில் தள்ளிய ஐடா!

ஐடா சூறாவளி தாக்கியதால் அமெரிக்காவின் லூசியானாவில் 750,000க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு மின்சார இணைப்பு தடைப்பட்டுள்ளது. ஜெனரேட்டர்கள் மட்டுமே வேலை செய்யும் நிலையில், அமெரிக்காவின் நியூ ஆர்லியன்ஸ் நகரம் இருளில் மூழ்கியுள்ளது. சென்ற வார இறுதியில் மெக்ஸிக்கோ வளைகுடாவில் உருவான ஐடா சூறாவளி அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் கரையைக் கடந்துள்ளது.



புயல் கரையை கடக்கும்போது 150 கிமீ/மணி காற்று வீசியது மற்றும் தப்பி ஓடாத மக்கள் அந்த இடத்தில் தங்க வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதனிடையே பேடன் ரூஜ் பகுதியில், அசென்ன் பாரிஷில் உள்ள வீடு மீது மரம் விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நியூ ஆர்லியன்ஸ் மாகாணத்தில் கத்ரீனா சூறாவளி 2005ஆம் ஆண்டு கத்ரினா சூறாவளி தாக்கியபொழுது சுமார் 1,800பேர் உயிரிழந்தனர்.

அதன்பின்பு அங்கு வெள்ளப் பாதுகாப்பு கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டன. அந்தக் கட்டமைப்புகள் சரியாகச் செயல்படுகின்றனவா என்பது ஐடா சூறாவளி கடக்கும்போது தெரியும். ஐடா கத்ரீனாவை விடவும் வலுவானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடலோரப் பகுதிகளுக்கு அப்பாலும் பெரிய பேரழிவை உண்டாக்கக்கூடிய உயிர் அச்சுறுத்தலாக ஐடா சூறாவளி இருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்திருந்தார்.

## ஈராக்கில் நிலைகொண்டது பிரான்ஸ்

அமெரிக்கா ஈராக்கைவிட்டு வெளியேறினாலும் பிரான்ஸ் தொடர்ந்தும் அங்கு தங்கியிருக்கும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

மத்தியகிழக்கு நாடுகளின் தலைவர்களுடனான சந்திப்பின் ஒரு பகுதியாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், ஈராக்கின் தலைநகரமான பக்தாத் சென்றிருந்தார்.

அங்கு, ஈராக் அரசாங்கத்துடன் நடாத்தப்பட்ட பேச்சின் பின்னர் உரையாற்றிய அவர், 'அமெரிக்காவின் தெரிவு எதுவாக இருந்தாலும் அமெரிக்கா ஈராக்கைவிட்டு வெளியேறினாலும்கூட, பிரான்ஸ் தொடர்ந்தும் பயங்கரவாதத்துடன் போராட, ஈராக்கில் தங்கியிருக்கும். ஈராக் அரசாங்கம் கேட்கும் வரை நாம் தொடர்ந்தும் அங்கு தங்கியிருப்போம்.

ஈராக்கில் எங்களது நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும் வலு பிரான்ஸிடம் உள்ளது' என அவர் தெரிவித்துள்ளார்.



Study in UK
• Minimum Requirement : GCE O/L (London or Local)
• IELTS minimum 4.0 average preferred
• Can apply without IELTS too
• Foundation / Diploma / Bachelors / Masters Programs
• Easy Visa Procedure / 28 days Bank Balance only required.
• Choice of Many Universities – Inner and Outer London
• Part time work during term time / Full time work during holidays.
SIC
Scholars Information Center
No. 527-1/1, First Floor, Galle Road, Wellawatte, Colombo 06.
Call : 0763 944 378

# இலங்கைத் தமிழர் நலனில் பா.ஜ.கவின் செயற்பாடுகள்; அறிக்கை வெளியிட்ட தமிழகத் தலைவர் அண்ணாமலை



தமிழகத்திற்கு குடிபெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் நலனைப் பாதுகாக்க, தமிழக முதல்வர் வெளியிட்ட அறிவிப்புகள் வரவேற்கத்தக்கன எனக் கூறியிருக்கும் பா.ஜ.கவின் மாநிலத் தலைவர் அண்ணாமலை, 'இலங்கைத் தமிழர் நலனில் பா.ஜ.க.' என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த முதல் இந்தியப் பிரதமர் மோடிதான். பிரதமர் இலங்கைக்கு சென்றபோது, மலையகத் தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் ரூபா 150 கோடி செலவில் கட்டப்பட்ட மருத்துவமனையைத் திறந்துவைத்தார். இந்தியாவின் உதவியுடன் இலங்கையின் வடகிழக்கு பகுதிக்கு குடிபெயர்ந்த தமிழர்களுக்காக 50,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மலையகத்தமிழர்களுக்காக 4,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

அம்புலன்ஸ் சேவைகளுக்கு இலங்கைத்தமிழர்களுக்கு இந்தியா உதவியது. ரூபா 147.81 கோடி நிதி உதவியுடன், ஆரம்பத்தில் 297 அம்புலன்ஸ் வண்டிகள் வாங்கப்பட்டன. உள்ளூர் மக்களுக்கு அம்புலன்ஸ் செலுத்துநர்கள் மற்றும் முதலுதவி நிபுணர்களாகப் பயிற்சியளிக்கப்பட்டது. இந்தத் திட்டம் இலங்கை மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதால், நாடு முழுவதும் இலவச அம்புலன்ஸ் சேவையை விரிவுபடுத்த இலங்கைக்கு 109 கோடி ரூபாவை இந்திய அரசு கூடுதலாக வழங்கியது.

இதன் மூலம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இலவச அம்புலன்ஸ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சென்னை - யாழ்ப்பாணத்துக்கிடையே விமானப் போக்குவரத்து நிறுவப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இந்தியாவால் கட்டப்பட்ட கலாசார மையம் விரைவில் திறக்கப்படவுள்ளது. இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் பிரச்சினையில் மத்திய அரசு இலங்கை அரசுடன் தொடர்ந்து தொடர்பில் உள்ளது. மீனவர்கள் பிரச்சினையைத் தீர்க்க, இரு நாடுகள் சார்பில் 2+2 கூட்டுப் பணிக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்கள் சமத்துவத்துடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்துள்ளது. இலங்கைத் தமிழர்கள் சம உரிமை மற்றும் கண்ணியத்துடன் வாழ்வதை இந்திய அரசு தொடர்ந்து உறுதி செய்து வருகிறது.

இலங்கைக் கடற்படையால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க இந்திய அரசு இலங்கை அரசுடன் தொடர்ந்து தொடர்பிலிருந்து பேச்சு நடத்தியுள்ளது. தங்கச்சி மடத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு இலங்கை நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை பிரதமர் தலையிட்டு விடுவிக்கக்கோரியதன் அடிப்படையில், அவர்கள் ஐவரும் உடனடியாக வீடு திரும்பினர். கடந்த பெப்ரவரியில் 9 மீனவர்களும், மார்ச்சில் 40 மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர். கூட்டுப் பணிக்குழுவின் முயற்சியால் இலங்கைக் கடற்படையின் துப்பாக்கிச்சூடு வெகுவாகக் குறைந்துள்ளது.

கடந்த பெப்ரவரியில், இலங்கையில் சிறுபான்மையினராக இருக்கும் தமிழர்களுக்கு உள் அதிகாரப் பகிர்வு குறித்த இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது பிரிவைத் திருத்துமாறு இலங்கை அரசுக்கு தனிப்பட்ட முறையில் வலியுறுத்தப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



## பண்டிகைக்கால கூட்ட நெரிசல்களைத் தடுக்க மாநிலங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல்

மாநில அரசுகளுக்கு இந்திய மத்திய உள்துறை செயலாளர் அஜய் பல்லா கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில், தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகள் அடுத்த சில மாதங்களில் வரவுள்ள நிலையில் கொரோனாப் பரவல் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் எனவே அதைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

குறிப்பாக பண்டிகைக் காலங்களில் மக்கள் கூட்டமாகக் கூடுவதைத் தடுக்க வேண்டும் என மத்திய உள்துறை செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனாத் தொற்றுப் பரவல் தேசிய அளவில் கட்டுக்குள் இருந்தாலும் சில மாநிலங்களில் மட்டும் கட்டுக்குள் வரவில்லை என்றும் அவர் தெரிவித்தார். கொரோனா கட்டுப்பாட்டு விதிமுறைகளைத் தீவிரமாக அமுலாக்க வேண்டும் என்றும் இதைச் செய்யத் தவறும் அதிகாரிகளை அத்தவறுக்குப் பொறுப்பாக்க வேண்டும் என்றும் இந்திய உள்துறை அமைச்சகம் மாநில அரசுகளை வலியுறுத்தியுள்ளது.

## பாடசாலைகளைத் திறப்பதில் நிதானம் காட்டுங்கள்!

### எய்ம்ஸ் மருத்துவமனைப் பேராசிரியர் கருத்து

கொரோனா இன்னும் முழுமையாக முடிவுக்கு வராத சூழலில் பாடசாலைகளைத் திறப்பதில் நிதானம் காட்டுமாறு மத்திய, மாநில அரசுகளை டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனைப் பேராசிரியர் நவீத் விக் கேட்டுக்கொண்டுள்ளார். ஏ.என்.ஐ. செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

பள்ளி மாணவர்களுக்கு இன்னும் தடுப்பூசி போடப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டிய பேராசிரியர் நவீத் விக், போக்குவரத்து, வகுப்புகளில் சமூக இடைவெளி கடைப்பிடிப் பதில் சிக்கல்கள் இருக்கின்றன எனவும் தெரிவித்தார். மாணவர்கள் அறைக்குள் இருக்கும் சூழலில் தொற்றுப் பரவும் வாய்ப்பு அதிகம் என்று குறிப்பிட்ட அவர், அடுத்த 2 மாதங் களில் பண்டிகைக்காலம் வருவதையும் கருத்தில் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதற்கிடையே கல்வியாளர்கள், மருத்துவர்கள் உள்ளிட்ட 56 பேர் பள்ளிகளை விரைவில் திறக்குமாறு பிரதமர் மோடிக்கும் மாநில முதலமைச்சர்களுக்கும் கூட்டாகக் கடிதம் எழுதியுள்ளனர். கொரோனாத் தொற்றுப் பரவலுக்குப் பின் ஒன்றரை ஆண்டுகளாக பாடசாலைகளைத் திறக்காத நான்கைந்து நாடுகளில் இந்தியாவும் ஒன்று என அவர்கள் கூறியுள்ளனர்.

பாடசாலைகளால் கொரோனா பரவும் என்ற அச்சம் தேவையற்றது என்றும் சிறாருக்குத் தொற்று அபாயம் குறைவு என்பதால் முதலில் ஆரம்பப் பள்ளிகளைத் திறக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## காஷ்மீர் பாதுகாப்பு குறித்து கவலைப்படத் தேவையில்லை

### இந்திய இராணுவ ஜெனரல் டி.பி. பாண்டே கருத்து




காஷ்மீர் பள்ளத்தாக்கின் பாதுகாப்பு நிலைமை கட்டுக்குள் உள்ளதாக இந்திய இராணுவத்தின் லெப்டினன்ட் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீா தலைநகர் ஸ்ரீநகரில் உள்ள மைதானத்தில் காஷ்மீர் பிறீமியர் லீக் கிரிக்கெட் போட்டித்தொடரின் இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. இந்தப் போட்டியைப் பார்வையிட காஷ்மீர் பள்ளத்தாக்கில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுவரும் சினார் படைப்பிரிவின் லெப்டினன்ட் ஜெனரல் டி.பி. பாண்டே சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

அப்போது அவரிடம் ஊடகவியலாளர்கள் ஆப்கானிஸ்தானின் அரசியல் நகர்வுகள் குறித்தும் இந்தியாவின் பாதுகாப்புக் குறித்தும் கேள்வியெழுப்பினர். அதற்குப் பதிலளித்த அவர், "இது ஒரு விளையாட்டு மைதானம். இங்கே வெளியாள்களைப் பற்றி நான் கருத்துக்கூற விரும்பவில்லை.

ஆனால், நினைவில் கொள்ளுங்கள். இங்குள்ள பாதுகாப்பு நிலைமை எங்கள் கட்டுக்குள்தான் உள்ளது.

காஷ்மீர் பள்ளத்தாக்கின் பாதுகாப்புக் குறித்து கவலைப்படத் தேவையில்லை. காஷ்மீரில் உள்ள இளைஞர்கள் விளையாட்டில் கவனம் செலுத்தவேண்டும். அவர்களால் நீரஜ் சோப்ராவைப்போல் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்ல முடியும்" என்று பதிலளித்திருக்கிறார்.

## அமெரிக்க வெளியுறவு அமைச்சருடன் அமைச்சர் ஜெய்சங்கர் ஆலோசனை



ஆப்கானிஸ்தானை தலிபான்கள் முழுவதுமாகக் கைப்பற்றிய பின்னர், அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளும் ஆப்கானில் சிக்கியிருக்கும் தங்கள் நாட்டு குடிமக்களை மீட்கும் இறுதி கட்டப் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பாக இந்திய மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் அன்டனி பிளிங்கனுடன் ஆலோசனை நடத்தியிருக்கிறார்.

இதுகுறித்து டுவிட்டரில் அமைச்சர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள பதிவில், "அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்டனி பிளிங்கனுடன் பேசினேன். ஆப்கானிஸ்தான் பற்றிய எங்கள் விவாதங்கள் தொடர்ந்தன. மேலும், ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் பற்றிய கருத்துக்களையும் பரிமாறிக்கொண்டோம்" என குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பில் திடீர் சுற்றிவளைப்பு 11 நெல் களஞ்சியங்களுக்கு சீல் வைப்பு





மட்டக்களப்பு மாவட்டத்தில் நுகர்வோர் அதிகார சபையினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது நெல் மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டமை தொடர்பாக பல வியாபாரிகளுக்கு எதிராக வழக்குகள் பதியப்பட்டமையுடன், பல நெல் களஞ்சியங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளன என கிழக்கு மாகாண உதவிப் பணிப்பாளரும் மட்டக்களப்பு மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரியுமான ஆர்.எப்.அன்வர் சதாத் தெரிவித்தார்.

நாடு பூராகவும் நெல் தட்டுப்பாடு தொடர்பான ஆய்வில் இச் சுற்றிவளைப்பு நடாத்தப்பட்டு இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான நெல் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் நுகர்வோர் அதிகார சபையினர் மட்டக்களப்பு நகர், காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களிலுள்ள பதிவு செய்யப்படாத நெல் களஞ்சியசாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது திடீர் சுற்றிவளைப்புகளை 25, 26, 27, 28 ஆம் திகதிகளில் மேற்கொண்டனர்.

இதன் போது பல ஆயிரக்கணக்கான நெல் மூடைகளை பதுக்கி வைத்திருந்தமைக்கு களஞ்சியசாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டமையுடன் வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என கிழக்கு மாகாண உதவிப் பணிப்பாளர் ஆர்.எப். அன்வர் சதாத் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று காரணமாக மக்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ள இந்நிலையில் மனிதாபிமானமின்றி ஒரு சில வியாபாரிகள் அரசாங்கத்தின் நிர்வாக நடைமுறையை கண்டுகொள்ளாமல் தங்களது வியாபார தந்திரோபாய நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றமையால் அந்த நடவடிக்கைகளுக்கு எதிராக சட்ட வரையறைக்கு உட்பட்டு இறுக்கமான நடவடிக் கைகளை எடுக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே,கருணாகரன் வழங்கிய ஆலோசனைக்கமைய இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள தாக ஆர்.எப்.அன்வர் சதாத் மேலும் தெரிவித்தார்.

# வில்லு குள கிழக்கு கரை அடாத்தாக ஆக்கிரமிப்பு





இறக்காமம் வில்லு குள கிழக்கு கரைக்குச் சொந்தமான நிலப்பகுதிகள் மிகவும் சூட்சுமமான முறையில் அடாத்தாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

குளத்தின் உயர்மட்ட எல்லைப் பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளதோடு கோடை காலத்தில் குளத்தில் நீர் வற்றும்போது குளத்தின் நீர் தேங்கும் பகுதிகளுக்குள் உயரமான வரம்புகள் கட்டப்பட்டு குளத்தின் பகுதிகள் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் பொது மக்கள் இறக்காமம் பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து பிரதேச சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தவகையில் குறிப்பிட்ட எல்லைப் பகுதிகளுக்குள் எந்தவிதமான விவசாய நடவடிக்கைகளும் பிரதேச சபையின் அனுமதி இன்றி செய்யக் கூடாது என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அந்த கட்டளையையும் மீறி செயற்பட்ட உழவு இயந்திரங்கள் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் படவுள்ளன.

# சாய்ந்தமருதில் இன்று தொடக்கம் இரண்டாவது தடுப்பூசி வழங்கல்




நாட்டில்வேகமாகப்பரவிவரும்கொரோனா அலையை கட்டுப்படுத்தும் நோக்கில் அரசினால் பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு கட்டமாக சாய்ந்தமருது பிரதேசத்தில் முதலாம் தடுப்பூசியை பெற்றுக்கொண்ட மக்களுக்கு இராண்டாம் தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டம் இன்று முதல் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் ஏற்பாட்டில் நான்கு கட்டங்களாக நடைபெற உள்ளதாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.அல் அமீன் றிசாட் தெரிவித்தார்.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், இந்த இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் முதல் கட்டமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசிகள் திங்கட்கிழமை இன்று முதல் வியாழக்கிழமை வரை வழங்கப்படவுள்ளது.

திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் பகல் 1 மணிவரை சாய்ந்தமருது 1 கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு அல்–ஜலால் பாடசாலை முன்பாக அமைந்துள்ள கிளினிக் சென்டரிலும், சாய்ந்தமருது 8 கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு பிரதான வீதியில் அமைந்துள்ள அல்– ஹிலால் வித்தியாலயத்திலும், சாய்ந்தமருது 14 கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு பிரதான வீதியில் அமைந்துள்ள சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையிலும், வொலிபேரியன் கிராம மக்களுக்கு வொலிபேரியன் கிராமத்தில் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மேலும் நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களை கட்டுப்படுத்த சுகாதாரத்துறை, பாதுகாப்பு துறை அடங்கலாக பல்வேறு தரப்பினரும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றனர் எனவும் பொதுமக்கள் இந்த பெருந்தொற்றை கட்டுப்படுத்த பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், சுகாதார நடைமுறைகளை பேணுவதுடன் சட்டங்களை மதித்து நடக்குமாறும் பொது மக்களை இதன்போது கேட்டுக்கொண்டார்.

# மூதூரில் முதியோர் கொடுப்பனவு

திருகோணமலை மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் சீ.அருள் செல்வம் அவர்களின் அறிவுறுத்தலுக்கமைவாக மூதூர் தபாலகத்தில் முதியோர் கொடுப்பனவுகளைப் பெறும் பயனாளிகளுக்கு தற்போது நாட்டில் அமுலில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் உள்ளதால் உரிய கொடுப்பனவுகள் நேற்று வீடு வீடாகச் சென்று கையளிக்கப்பட்டன.

இதனை மூதூர் தபாலகத்தின் உதவித் தபால் அதிபர் எம்.எம்.றிசாட் மற்றும் காரியாலய உதவியாளரின் மூலமும் பயனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று இந் நிதியுதவியினை கையளித்தனர்.

வாழ்வியல் நெருக்கடியான இக்காலகட்டத்தில் இவ்வாறான முதியோர் கொடுப்பனவுகளை வீடு, வீடாகச் சென்று கையளிக்க நடவடிக்கை மேற்கொண்டமைக்கு பயனாளிகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகருக்கு தங்களது மனப்பூர்மான நன்றிகளைத் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## பாரா ஒலிம்பிக்கில் இலங்கைக்கு தங்கம்

# தினேஷ் பிரியந்த உலக சாதனை




டோக்கியோவில் நடைபெறும் பாரா ஒலிம்பிக் ஈட்டி எறிதல் எப் 46 பிரிவுப் போட்டியில் தங்கப்பதக்கத்தை உலக சாதனையுடன் இலங்கை வீரர் தினேஷ் பிரியந்த ஹேரத் வென்றெடுத்திருக்கிறார். இதன் மூலம் பாரா ஒலிம்பிக் வரலாற்றில் இலங்கை தனது முதல் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஆறாவது நாளான இன்று காலை நடைபெற்ற ஆண்களுக்கான ஈட்டி எறிதல் எப் 46 பிரிவுக்கான ஆறு சுற்றுகளைக் கொண்ட இறுதிப் போட்டியில் முதல் முயற்சியிலேயே 62.58 மீற்றர் தூரம் ஈட்டியை வீசி தனது அதிகபட்ச தூரத்தைப் பதிவுசெய்த தினேஷ் பிரியந்த, இரண்டாவது முயற்சியில் 62.19 மீற்றர் தூரத்துக்கு எறிந்திருந்தார். மூன்றாவது முயற்சி 67.79 மீற்றர் தூரத்தை எட்ட, அது புதிய உலகசாதனையாகப் பதிவாகி அவருக்குத் தங்கப்பதக்கத்தையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது.

இந்தியாவின் வீரர் தேவேந்திரா 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ரியோ பாரா ஒலிம்பிக்கில் நிகழ்த்திய உலக சாதனையான 63.97 மீற்றர் துரத்தை நான்கு மீற்றர்களால் தினேஷ் பிரியந்த ஹேரத் முறியடித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்த வருடப் போட்டியில் இவர் வெண்கலப்பதக்கத்தை வென்றிருந்தமை கவனிக்கத்தக்கது.

இதற்கு முன்னர் பாரா ஒலிம்பிக்கில் 2012 லண்டனில் பிரதீப் சஞ்சன ஆண்களுக்கான ரி46 பிரிவு 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப்பதக்கத்தையும், 2016 ரியோ பாரா ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான எப்46 பிரிவு ஈட்டி எறிதலில் தினேஷ் பிரியந்த வெண்கலப் பதக்கத்தையும் வென்றமையே இலங்கையின் பாராலிம்பிக் சாதனைகளாக இருந்தன.

டோக்கியோ பாரா ஒலிம்பிக்கில் தினேஷ் பிரியந்த தங்கப் பதக்கத்தை வென்றதன் மூலம் பதக்கப் பட்டியலில் இலங்கை 42ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

தினேஷுடன் குறித்த போட்டியில் பங்குகொண்ட உலக மற்றும் ரியோ பரா ஒலிம்பிக் சம்பியனான இந்தியாவின் தேவேந்திரா 64.35 மீற்றர் தூரத்துக்கு வீசி வெள்ளிப் பதக்கத்தையும், மற்றுமொரு இந்திய வீரரான குர்ஜார் சுந்தர் சிங் 64.01 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப்பதக்கத்தையும் வென்றுள்ளனர்.



# அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் இன்று ஆரம்பம்

இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் இன்று ஆரம்பமாகிறது. செப்டெம்பர் 12 ஆம் திகதி வரை இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

டென்னிஸின் மும்மூர்த்திகளான ரோஜர் பெடரர், ரபேல் நடால் மற்றும் 34 வயதான ஜோகோவிச் ஆகியோர் இதுவரை தலா 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று முதல் இடத்தில் உள்ளனர். இதில் ஜோகோவிச் 21 ஆவது கிராண்ட்ஸ்லாமைக் கைப்பற்றி அதிக பட்டத்தை வென்ற முதல் வீரர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைக்க இந்தத் தொடரில் வாய்ப்பு இருக்கிறது.

நடால், பெடரர், நடப்பு சம்பியன் டொமினிக் தீம் ஆகியோர் காயம் காரணமாக அமெரிக்க ஓபன் தொடரில் விளையாடாதமை, ஜோகோவிச்சுக்கான சந்தர்ப்பம் அதிகமாக இருப்பதாகக் கருதப்படுகிறது.

ஜோகோவிச் இந்த ஆண்டு நடந்த ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்ச் ஓபன் மற்றும் விம்பிள்டன் ஆகிய கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

தற்போது அமெரிக்க ஓபனிலும் வெற்றி பெற்றால் ஒரே ஆண்டில் 4 கிராண்ட்ஸ்லாமையும் கைப்பற்றிய வீரர் என்ற சாதனையையும் அவர் படைப்பார்.

ஜோகோவிச் அமெரிக்க ஓபன் பட்டத்தை 3 முறை (2011, 2015, 2018) வென்றுள்ளார். தற்போது 4 ஆவது முறையாக பட்டம் வெல்லும் ஆர்வத்தில் அவர் களமிறங்கியுள்ளார். ஜோகோவிச்சுக்கு மெட்வடேவ், அலெக்சாண்டர் ஸ்வரேவ் போன்ற வீரர்கள் சவால் கொடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் வில்லியம்ஸ் சகோதரிகளான செரீனா, வீனஸ் ஆகியோர் காயத்தால் விளையாடவில்லை.

முதல் நிலை வீராங்கனையான அஷ்லெ பார்டி, 2 ஆவது இடத்தில் உள்ள சபலென்கா, ஒசாகா, பிளிஸ்கோவா ஆகியோருக்கிடையே கடும் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# 4 ஆவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு

இங்கிலாந்து - இந்திய கிரிக்கெட் அணிகள் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றன.




மூன்று போட்டிகள் நடந்து முடிந்துள்ள நிலையில் இந்தத் தொடர் 1 - 1 என சமனிலையில் உள்ளது. நான்காவது போட்டி ஓவல் மைதானத்தில் வரும் செப்டெம்பர் 2 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

அந்தப்போட்டியில் விளையாடவுள்ள 15 பேர் கொண்ட அணியை இங்கிலாந்து அறிவித்துள்ளது.

காயத்திலிருந்து மீண்டுள்ள கிறிஸ் வோக்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அதே போல சாம் பில்லிங்ஸும் இணைந்துள்ளார். ஜோஸ் பட்லருக்கு அணியில் இடம் வழங்கப்படவில்லை.

இங்கிலாந்து அணி விவரம்-

ஜோ ரூட் (அணித் தலைவர்), மொயின் அலி, ஜேம்ஸ் அன்டர்சன், ஜொனி பெயர்ஸ்டோ (விக்கெட் காப்பாளர்), சாம் பில்லிங்ஸ், ரோரி பேர்ன்ஸ், சாம் கரன், ஹசீப் ஹமீட், டொன் லாரன்ஸ், டேவிட் மலன், கிரைக் ஓவர்டொன், ஒலி போப், ஒலி ரொபின்சன், கிறிஸ் வோக்ஸ், மார்க் வுட்.




# இங்கிலாந்துக்காக அதிக டெஸ்ட் வெற்றிகள் அணித்தலைவர் ஜோ ரூட் புதிய சாதனை

லீட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்திய- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் 3 ஆவது போட்டியில் இந்தியாவை இன்னிங்ஸ் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றது இங்கிலாந்து அணி.

இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராக அதிக போட்டிகளில் வெற்றி பெற்றவர் என்ற பெருமையை ஜோ ரூட் பெற்றுள்ளார். இந்த வெற்றி இங்கிலாந்து அணித்தலைவராக ஜோ ரூட்டுக்கு 27 ஆவது வெற்றியாகும்.

இதற்கு முன் மைக்கேல் வோகன் தலைமையில் இங்கிலாந்து அணி 51 டெஸ்ட்களில் 26 போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தது.

அன்ட்ரூ ஸ்ட்ரோஸ் தலைமையில் 50 போட்டிகளில் 24 வெற்றிகளும், அலிஸ்டர் குக் தலைமையில் 59 இல் 24 வெற்றிகளும், பீட்டர் மே தலைமையில் 41 போட்டிகளில் 20 வெற்றிகளையும் இங்கிலாந்து அணி பெற்றிருக்கிறது

# யுத்தம் மௌனித்து 12 ஆண்டுகள் கடந்த நிலையிலும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு எந்த தீர்வும் இல்லை!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் வேதனை



யுத்தம் மௌனிக்கப்பட்டு 12 வருடங்கள் கடந்த போதும் வடக்கு கிழக்கில் இருந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு இலங்கை அரசாலோ அல்லது சர்வதேசத்தாலோ எந்த ஆக்கபூர்வமான தீர்வும் கிடையாமையால் ஏக்கப்பெருமூச்சுடனேயே இன்றையசர்வதேகாணாமல்ஆக்கப்பட்டோர் தினத்தையும் கடக்கவேண்டி உள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசு கட்சி ஊடக செயலாளரும், பட்டிருப்பு தொகுதி இலங்கைத் தமிழரசு கட்சி தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான ஓகஸ்ட் 30 இன்று ஆகும். இன்று அதுதொடர்பாக மேலும் கருத்துக் கூறுகையில்-

ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் சர்வதேச காணாமல் போனோர் தினம் முன்னெடுக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டில் கொஸ்தாரிக்கா நாட்டில், கைது செய்யப்பட்டதன் பின்னர் காணாமல் போனவர்களின் உறவினர்களின் அமைப்பு இவ்வாறானதொரு தினம் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என யோசனையை முன்வைத்திருந்தனர். இதையடுத்து 1992ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி, ஐக்கிய நாடுகள் சபை காணாமல் போனவர்களைப் பாதுகாப்பது தொடர்பான பிரகடனத்தை நிறைவேற்றியுள்ளது.

அதன்படி ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி சர்வதேச காணாமல் போனோர் தினம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இனங்காணப்படாத பகுதிகளில் தடுத்து வைத்தல், உறவினர்களுக்கு தெரியாமலோ, சட்டரீதியிலான காரணங்களுக்காகவோ கைது செய்யப்பட்டதன் பின்னர் காணாமல் போனவர்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் நோக்கில் இந்த தினம் முன்னெடுக்கப்படுகின்றது.

அந்த வகையில் சர்வதேச காணாமல் போனோர் தினம் இலங்கையிலும் பல இடங்களில் இன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் நடைபெற்ற 30 வருட கால யுத்தத்தின் போது காணாமல் போனவர்கள் ஏராளமானவர்கள். இவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? என்று கூட தெரியாமல் இன்று வரை தேடி வருகின்றனர் அவர்களது உறவினர்கள். இதற்காக நாள்களைக் கடந்து, வாரங்களைக் கடந்து, மாதங்களைக் கடந்து வடக்கு மற்றும் கிழக்கில் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போராட்டங்கள், உண்ணாவிரதங்கள், பேரணிகள் என பல முயற்சிகளை முன்னெடுத்த போதும் அவர்களுக்கு இன்று வரை எவ்விதப் பதிலும் கிடைக்கவில்லை.

போராட்ட இடத்துக்கு வரும் அரசியல் தலைவர்களும், தமிழ் தலைமைகளும் தீர்வைப் பெற்றுத் தருவதாகக் கூறி விட்டு சென்றாலும் இதுவரை அதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுத்தபாடில்லை.

அந்த வகையில் இன்று முன்னெடுக்கப்பட்ட சர்வதேச காணாமல் போனோர் தினத்தை முன்னிட்டு வடக்கில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிழக்கில் மட்டக்களப்பு உள்ளிட்ட பல பகுதிகளில் காணாமல் போன தமது உறவுகளை தேடித் தருமாறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த வருட காணாமல் போனோர் தினத்தை இலங்கையில் பரவலாக கொரோனா வைரஸ் தாக்கத்தால் செய்ய முடியாமல் உள்ளது.

ஆட்சிகள் மாறினாலும் வடக்குக் கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை. சர்வதேசத்தின் மூலமாகவும் நீதி பெறப்படாமல் தொடர்ச்சியான போராட்டங்களை எமது மக்கள் தினமும் செய்து கொண்டே உள்ளனர்.

கடந்த 2020, ஓகஸ்ட 30, வடக்கு கிழக்கின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளால் சர்வதேசத்துக்கு நான்கு கோரிக்கைகள் அனுப்பப்பட்டன.

பொறுப்புக்கூறலும் தமிழ் மக்களுக்குரிய நீதியும் கிடைப்பதாக இருந்தால் முழுமையான சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையூடாக மட்டுமே சாத்தியமாகும்.

எனவே தங்களது தலைமையில் நடைபெற இருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 44ஆவது கூட்டத்தொடர் நடைபெறுவதற்கு முன்னதாக அவ்வகையான சர்வதேச குற்றவியல் விசாரணை ஒன்றை சர்வதேச குற்றவியல் நீதிமன்றமூடாகவோ அல்லது சர்வதேச குற்றவியல் விசேட தீர்ப்பாயம் ஒன்றினூடாகவோ நடத்துவதற்கான நடவடிக்கைகளைத் தாங்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமெனவும் எதிர்வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் செப்டெம்பர் கூட்டத்தொடருக்கு முன்மொழிய வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றோம்.

சமர்ப்பிக்கும் அறிக்கையில் நீதியையும் பொறுப்புக் கூறலையும் சாத்தியப்படுத்த அவசியமான அரசியல் விருப்பு இலங்கை அரசிடம் இல்லை என்பதால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் மார்ச் 2019 கூட்டத்தொடரில் ஸ்ரீலங்கா அரசுக்கு வழங்கிய கால அவகாசத்தை நீக்க வேண்டும் என்ற முன்மொழிவை தாங்கள் முன்மொழிய வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற இன அழிப்பு யுத்தக்குற்றங்கள், மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் முழுமையான சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்றை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக மேற்கொள்ள வேண்டுமென ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஐ.நா. செயலாளர் நாயகம் அவர்களுக்குப் பரிந்துரை செய்யத் தாங்கள் வலியுறுத்த வேண்டுமெனக் கோருகின்றோம். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான ஐ.நா. குழு இலங்கையைமுழுமையாகவிசாரணை செய்துநடவடிக்கைஎடுக்கவேண்டுமென ஐ.நா. செயலாளர் நாயகத்துக்குப் பரிந்துரைக்க வேண்டும்.

இலங்கைக்கான விசேட ஐ.நா. அறிக்கையாளரை நியமிக்க வேண்டும் என்ற பரிந்துரையையும்,வடக்கு-கிழக்கு நிலைவரத்தைக் கண்காணிக்கவும் மேம்படுத்தவும், உறுதுணையாகவும் இருக்க ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கள அலுவலகம் ஒன்றை வடக்கு-கிழக்கில் நிறுவ வேண்டும் எனவும் மீளவும் வலியுறுத்துகின்றோம். - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நான்கு கோரிக்கை அனுப்பபட்டு ஒருவருடம் கடந்து தற்போது 2021, ஓகஸ்ட் 30, ஆம் திகதி அடுத்த காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் இன்றும் எந்தப் பதிலும் இன்றி கண்ணீருடன் எமது உறவுகள் உள்ளனர்,

எனவே இனியும் காலம் கடத்தாமல் எமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சரியான நீதி கிடைக்கவேண்டும் என்பதை மீண்டும் இன்றைய நாளில் வலியுறுத்துகிறோம் எனவும் மேலும் கூறினார்.

## துப்பாக்கிகள், தோட்டாக்கள் வைத்திருந்தவர் கைது

இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஐந்து துப்பாக்கிகள், 22 தோட்டாக்கள் மற்றும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுஎன்பவற்றுடன் சந்தேக நபர் ஒருவரைக் கேகாலை பொலிஸார் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கேகாலை, ரம்புக்கனை பிரதேசத்திலேயே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கேகாலை தலைமையகப் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடொன்றிலிருந்து துப்பாக்கி, தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

37 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கனரக லொறி விபத்து ஹற்றனில் ஒருவர் காயம்


கொழும்பிலிருந்து நுவரெலியா பகுதிக்கு அரிசி ஏற்றிச்சென்ற லொறி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த லொறி, நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில், ஹற்றன் குடாகம பகுதியில் வைத்து வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு, இந்த விபத்து நேர்ந்துள்ளதாகவும் சாரதியின் கவனயீனமே விபத்துக்குக் காரணம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் காயமடைந்த லொறியின் சாரதி, பலத்த காயங்களுடன் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்நிலையில் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## 96,454 பேருக்கு கொழும்பில் தொற்று

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் இதுவரையில் 96 ஆயிரத்து 454 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா நோயாளர்கள் தொடர்பில் சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி, கம்பஹா மாவட்டத்தில் இதுவரையில் 77 ஆயிரத்து 633 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், களுத்துறை மாவட்டத்தில் இதுவரையில், 43ஆயிரத்து 332 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த மூன்று மாவட்டங்களை தொடர்ந்து காலி மாவட்டத்திலேயே அதிகளவானோருக்குத் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி, காலி மாவட்டத்தில் இதுவரையில் 22 ஆயிரத்து 996 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவு அறிவித்துள்ளது.

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தடுப்பூசி திட்டத்தை விரிவுபடுத்த கோரிக்கை

நாட்டில் முன்னெடுக்கப்படும் தடுப்பூசி திட்டத்தை விரிபுபடுத்தி, உடல்நலம் பாதிக்கப்பட்ட மற்றும் வெளிநாடு செல்லவிரும்புபவர்களுக்கும் செலுத்துமாறு பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக நிலையங்களில் தடுப்பூசி வழங்கப்படுவது இல்லை என்றும் அவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகிறார்கள் என்பதை சுட்டிக்காட்டியே அச்சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்தார்.

இருப்பினும் சில வைத்தியசாலைகளில் பிரத்தியேகமாக தடுப்பூசி வழங்குவதற்குரிய வசதிகள் இல்லை என்பதால் அவர்கள் மீண்டும் தற்காலிக நிலையங்களுக்குத் திரும்புகின்றனர் எனவும் அவர் கூறினார்.

ஆகவே அனைத்து வைத்தியசாலைகளிலும் கடுமையான உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான வசதிகள் இருக்க வேண்டும் என உபுல் றோஹண குறிப்பிட்டார். இதேவேளை வெளிநாடு செல்ல விரும்புவோர் அதற்குத் தேவையான ஆவணங்களை இதுவரை பெற்றுக் கொள்ளாதமையின் காரணமாக தடுப்பூசியை பெறுவதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் எனவும் உபுல் றோஹண தெரிவித்தார். ஆகவே தற்போதைய தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை தொடர்பாக மீளாய்வு செய்து குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு அவர் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.08.2021இல் வெளியிடப்பெற்றது.